செப்டம்பர் 28

## *புனித வென்செஸ்லாஸ் (907 – 938)*

இவருடைய தந்தையின் பெயர் விராத்திஸ்லாஸ். பொஹேமியா நாட்டின் கோமகன் அவர். வென்செஸ்லாஸ் கிறிஸ்தவர். தாய் த்ரஹோமிரா என்பவள் அவிசுவாசி. மிகக் கெட்டவள். புனிதவதியான இவர் பாட்டியின் பெயர் முத்திப்பேறு பெற்ற லுத்மில்லா. அவளே இவருக்குக் கல்வி பயிற்சி அளித்தாள். கல்லூரி கல்விப் பயிற்சிக்காக இவர் தூரமான ஓர் ஊருக்குச் சென்றார். இவர் சிறுவராய் இருக்கும் போதே தந்தை இறந்தார். தாய் ஆட்சியைக் கைப்பற்றி கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி வந்தாள்.

தம் பாட்டியின் ஆலோசனைக்கு இணங்க இவர் ஆட்சியைக் கைப்பற்றினார். இவருடைய தம்பியின் பெயர் பொலஸ்லாஸ். இருவருக்குமிடையே மனஸ்தாபம் ஏற்படாதபடி ஆட்சி இருவருக்கும் பங்கு போட்டுக் கொடுக்கப்பட்டது. தம்பியோ தாயைப் பின்பற்றி கிறிஸ்தவர்களை வெறுத்து வந்தான். வென்செஸ்லாஸ் புனித வாழ்வு நடத்தி வந்தார். திவ்விய நற்கருணை மீது மிகுந்த பகுதி கொண்டார். இவர் விரத்தராக வாழ்ந்தார். குருக்களுக்கு மிகுந்த வணக்கம் காண்பிப்பார். திருப்பலிக்கான அப்பத்தையும் இரசத்தையும் இவரே தயாரிப்பார். இவரது ஆட்சியில் சில பிரபுக்கள் மக்களைத் துன்புறுத்தி வந்தார்கள். அவர்களை இவர் கண்டித்தார். அவர்களோ இவருடைய தாயுடன் சேர்ந்து கொண்டு இவரைக் கொல்லத் தீர்மானித்தார்கள். நடுச்சாமத்தில் இவர் கோவிலில் செபித்துக் கொண்டிருந்தார். இவருடைய தம்பியே 938-ல் இவரைக் கொன்றான்.

குருக்களை இவர் பிரபுக்கள் என்று அழைப்பார். குருவானவர் ஏழைப் பெற்றோரிடம் பிறந்தாலும் அல்லது உயர்குல பெற்றோரிடம் பிறந்தாலும் அவர் கடவுளது பிரபுக் குலத்தைச் சேர்ந்தவர், உன்னத குருவான இயேசுகிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கு பெறுகிறவர் என இவர் அடிக்கடி கூறுவார்.

**சிந்தனை:**

இவரைப் போல் திவ்விய நற்கருணை மீது நமக்கு மிகுந்த பக்தி இருக்க வேண்டும். திருப்பேழையில் இருக்கும் இயேசுவை அடிக்கடி சந்தித்து நமக்கும் பிறருக்கும் நன்மை ஏராளமாய்ச் செய்யலாம்.

**செபம்:**

திவ்விய நற்கருணையில் இருக்கிற இயேசுவே, எங்கள் விசுவாசத்தைத் திடப்படுத்தும்.